ஏற்போர் 'ஆம்' என்க, (ஆம்),
மறுப்போர் 'இல்லை' என்க, (இல்லை),
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது,

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது,

4. உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி

(இ) உறுப்பினரால் பேரவைச் செயலருக்கு அனுப்பப்பெறும் முன்னறிவிப்பினைக் குறித்த செய்தியை முன்கூட்டியே 'தினகரன்' நாளிதழ் வெளியிட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. டி. எம். ரங்கராஜன், எம்.எல்.ஏ. அவர்கள் 2—4—1993 அன்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மீது ஓர் உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்தார், பேரவை விதி 36(5)இன்படி உறுப்பினரால் செயலருக்கு அனுப்பப்பெறும் முன் அறிவிப்பினைப் பேரவைத் தலைவர் அனுமதித்து உறுப்பினர்களுக்கு அனுப்பாதவரை அதனை உறுப்பினரோ அல்லது வேறு எவரோ வெளியிடக்கூடாது என்றிருப்பதைச் சுட்டிக் காட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவரைப் பதவியில் இருந்து நீக்கக் கோரி தீர்மானம் கொண்டு வந்திருப்பதாகச் சொல்லப் பட்டு 2—4—1993 அன்று பத்திரிக்கைகளில் வந்திருப்பதாக உள்ளது, தன்னுடைய உரிமையை மட்டுமல்லாது அவையின் உரிமையையும் பாதிப்பதாக உள்ளதாகத் தெரிவித்து அச்செய்தி "தினகரன்" பத்திரிக்கையில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் தெரிவித்ததாக உள்ளதால், எதிர்க்கட்சித் தலைவர் மீது ஓர் உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வருவதாகவும் அவையில் விளக்கினார், இதுபற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும் போது, 'I have not made it public and I will not make it public, என்றார், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இது பற்றிக் கூறும்போது. அந்தச் செய்தி எப்படிப் பத்திரிகைகளில் வந்தது என்பதை விசாரித்து அதற்குப் பிறகு யார் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வரவேண்டுமென்று முடிவு எடுப்பது நல்லது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள், நான் அவை முன்னவர் அவர்களின் ஆலோசனையை ஏற்று பத்திரிகையாளர்களை விசாரித்து அதன் அடிப்படையிலே முடிவு செய்யலாம் என்று அறிவித்தேன்,

இது தொடர்பாகப் பல்வேறு பத்திரிகைகளில் வந்திருந்த செய்திகளைப் பார்க்கையில் 'தினகரன்' பத்திரிகை மட்டும் இந்த அறிவிப்புத் தொடர்பான தகவல்களை திரு. எஸ். ஆர்

1993 ஏப்ரல் 30] [பேரவைத் துணைத் தலைவர்]

பாலசுப்ரமணியன் அவர்கள் பத்திரிகைகளுக்குத் தெரிவித்ததாகச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது, விளக்கம் கோரப்பட்ட பல்வேறு பத்திரிகைகள் தமது விளக்கக் கடிதத்தில் இதுபற்றிய செய்தி பி.டி.ஐ, மற்றும் யூ.என்.ஐ. ஆகிய செய்தி நிறுவனங்களின் மூலம் பெறப்பட்டதாகத் தெரிவித்தன. சில பத்திரிகைகள் தமது இயல்பான செய்திகள் சேகரிக்கும் நடவடிக்கைகள் மூலம் கிடைத்த தகவல் என்று தெரிவித்துள்ளன, மேலும் இதுபோன்ற நிலை எதிர்காலத்தில் ஏற்படாது தவிர்க்கப்படும் எனத் தெரிவித்துள்ளதை ஏற்றுக்கொள்ளலாம் எனக் கருதுகிறேன்,

'தினகரன்' நாளிதழ் மட்டும் தமது பதிலில் 'Though you have mentioned in your letter that there is prima facie case of breach of privilege against our newspaper, we have reason to believe that no privilege issue has been raised against our newspaper, on the Floor of the Assembly,' எனத் தெரிவித்தது. திரு. டி. எம். ரங்கராஜன் அவர்கள் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மீதுதான் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தார்கள் என்றாலும். அப்பத்திரிகையும் அவை உரிமையை மீறும் வகையில்தான் செய்தி வெளியிட்டுள்ளது என்பது விதிகளின்படி தெளிவாகிறது, இருந்தாலும் அவை உரிமையினை அப்பத்திரிகையும் மீறியுள்ளது ஏன் என்பதற்கான விளக்கம் நேரடியாகத் தரவில்லை. மேலும், அப்பத்திரிகைக்கு மேற்படி செய்தி எவ்வாறு கிடைத்தது என்ற விவரத்தினையும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் அவர்கள் தெரிவித்ததாகப் பிரசுரித்திருப்பது அவை உரிமை மீறிய செயலாகக் கருத வேண்டியிருக்கும் என்று தெரிவித்து, அவர்களிடம் விளக்கம் கோரியதற்கு, நேரடியான பதில் தராததால் 13—4—1993 தேதியிட்ட இச்செயலகக் கடிதத்தில் மேற்படி செய்தி எதிர்க்கட்சித் தலைவரால் கொடுக்கப்பெற்றது என்று பிரசுரிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி அவர் அத்தகைய செய்தியைப் பத்திரிகைக்கு அளித்தாரா என்பதையும் குறிப்பாகத் தெரிவிக்கும்படி வலியுறுத்தப்பட்டது, இக்கடிதத்திற்கு இந்நாள் வரையில் 'தினகரன்' செய்தி ஆசிரியரிடமிருந்து பதில் எதுவும் வரவில்லை.

திரு. டி. எம். ரங்கராஜன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மீது உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பியிருந்த போதிலும், அவர் 'I have not made it public and I will not make it public' என்று திட்டவட்டமாகத் தெரிவித்த காரணத்தாலும், இது குறித்து மாற்றுக்கருத்து எதுவும் எந்தப் பத்திரிகை நிறுவனங்களிடமிருந்தும் வராத நிலையிலும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த விளக்கம் ஏற்றுக்கொள்ளத் தக்கது என்றே கருத வேண்டியுள்ளது.

எனினும், 'தினகரன்' பத்திரிகையைப் பொறுத்தவரையில் பத்திரிகைச் செய்தியில் மேற்படி செய்திக் குறிப்பு திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன், எதிர்க்கட்சித் தலைவரால் கொடுக்கப்பட்டிருந்தது என வெளியிட்டதற்குக் கேட்கப்பட்ட விளக்கத்திற்கு இதுவரை பதில் கிடைக்காத காரணத்தால் அப்பத்திரிகை மீது உரிமை மீறல் பிரச்சினை எழுப்பப் பெறவில்லை என்ற போதிலும், அப்பத்திரிகையில் செய்தி வெளியிட்டிருந்த விதம் அவை உரிமை மீறிய செயல்தான் என்பது தெளிவாகிறது, எனவே பேரவை விதி 226-இன்படி 'suo motu' ஆக இந்தப் பத்திரிகையின் அவை உரிமை மீறிய செயலை ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்து பேரவைக்கு அறிக்கை அளிப்பதற்காக இப்பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

பிற்பகல் 12.15

9. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஈ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிகழ்ச்சி நிரலில் 4-வது இனத்திலிருந்து 9-வது இனம் வரையில் உள்ள பகுதிகளுக்கு முன்னதாக 10-வது இனத்தை எடுத்துக் கொள்ளும்படியாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.